## திருப்பூர் தெற்கு மாவட்டத்தில், கழக மூத்த முன்னோடிகள் 1,200 பேருக்குப் பொற்கிழி:

# பெரியார் - அண்ணா - கலைஞரின் மறு உருவமாகத்தான் மூத்த முன்னோடிகளைப் பார்க்கிறேன்!

## பாராட்டு விழாவில் கலந்துகொண்டு – பொற்கிழி வழங்கி – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரை!

திருப்பூர், பிப்.24 -

**திருப்பூர் தெற்கு மாவட்டத்தில், கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள், கழகத்திற்காக நீண்டகாலம் உழைத்து வரும் 1,200 கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கினார்.**

**அப்போது அவர், ``மூத்த முன்னோடிகளான உங்களை தந்தை பெரியாரின் மறு உருவமாக, பேரறிஞர் அண்ணாவின் மறு உருவமாக, முத்தமிழறிஞர் கலைஞரின் மறு உருவமாகத்தான் பார்க்கிறேன்" என்று குறிப்பிட்டார்.**

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய சிறப்புரை வருமாறு :-




இன்று உங்களையெல்லாம் சந்தித்துப் பொற்கிழி வழங்குவதில், உண்மையிலேயே மிகுந்த பெருமை அடைகிறேன். இன்று காலை 9.30 மணியிலிருந்து பல்வேறு நிகழ்ச்சிகள். பொள்ளாச்சியில் புதிய பேருந்து நிலையம் திறந்து வைத்துள்ளேன். அய்யா பொள்ளாச்சி மகாலிங்கம் அவர்களின் பெயரில், ஒரு சாலைத் திறப்பு நிகழ்ச்சி மற்றும் நம் நாடாளுமன்ற உறுப்பினரின் அலுவலகம் திறந்து வைத்துள்ளேன்.

### புதிய வேகம், புதிய உற்சாகம்

இளைஞர் அணி சார்பாகக் கலைஞர் நூற்றாண்டு நூலகத்தைத் திறந்து வைத்துள்ளேன். இப்படி ஏராளமான திட்டங்கள், ஏகப்பட்ட நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு கழக மூத்த உடன்பிறப்புகள் உங்களையெல்லாம் பார்க்கும்போது, ஒரு புதிய வேகம், புதிய உற்சாகம் எனக்குள் பிறக்கிறது.

மாவட்டச் செயலாளர்கள், தங்களின் மாவட்டத்துக்கு வரவேண்டும், நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வேண்டும் திருமண நிகழ்ச்சி கட்சி நிகழ்ச்சி எதுவாக இருந்தாலும் என்னிடம் அழைப்பு விடுக்கும்போது நான் அவர்களிடம் சொல்கின்ற ஒரேயொரு அன்புக் கட்டளை இதுதான். ``நான் உங்களின் மாவட்டத்திற்கு நிச்சயம் வருகிறேன். எத்தனை நிகழ்ச்சி நடத்தினாலும் நான் அதில் கலந்துகொள்கிறேன். ஆனால், என் திருப்திக்காக, மகிழ்ச்சிக்காக நீங்கள் ஒரேயொரு நிகழ்ச்சி நடத்த வேண்டும். கழகத்திற்காக உழைத்த மூத்த முன்னோடிகள் அனைவரையும் அழைத்து, நீங்கள் கௌரவப்படுத்தி அவர்களுக்குப் பொற்கிழி வழங்க வேண்டும். அப்படி நீங்கள் நடத்தினீர்கள் என்றால், நான் நிச்சயம் வருவேன்" என்று ஒரு நிபந்தனை விதிப்பது உண்டு. அப்படித்தான் அண்ணன் ஈஸ்வரசாமி அவர்கள் இன்றைக்கு என்னிடத்தில் தேதி வாங்கி இந்த நிகழ்ச்சியை நடத்தி, நானும் நீங்களும் சந்திக்கின்ற அந்த வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார். அவருக்கு முதலில், அண்ணன் ஈஸ்வரசாமி அவர்களுக்கும் நம் மாவட்டக் கழக நிர்வாகிகள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

### இளைஞர் அணி நிர்வாகிகள்

இன்றைக்கு ஒரு முக்கியமான நாள். இன்று மாலை நம் மேற்கு மண்டலத்தின் இளைஞர் அணி நிர்வாகிகள் கிட்டத்தட்ட 78,000 முதல் 80,000 பேரை சந்திக்கின்ற ஒரு நிகழ்ச்சி, கோயம்புத்தூரில் மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அந்த நிகழ்ச்சிக்குச் செல்வதற்கு முன்பு உங்களின் வாழ்த்துகளைப் பெறுவதற்காக இளைஞர் அணிச் செயலாளராக இன்றைக்கு இந்த நிகழ்ச்சிக்கு வந்திருக்கிறேன்.

இன்று நம் இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கி, 76 ஆண்டுகள் ஆகிவிட்டன. 76 ஆண்டுகளானாலும் இன்றைக்கும் அதே இளமையோடும் அதே துடிப்போடும் களத்தில் மக்கள் பணியாற்றிக்கொண்டு இருக்கிறோம் என்றால், இங்கு வந்திருக்கக்கூடிய கழகத்துக்காக உழைத்த மூத்த முன்னோடிகள் நீங்கள்தான் காரணம்.

எப்போதுமே ஒரு கட்டடம் பலமாக இருக்கிறது என்றால் அதற்கு கீழே போடப்பட்டுள்ள அடித்தளம் மிக மிக முக்கியம். அடித்தளம் வெளியே தெரியவே தெரியாது. ஆனால், அந்த அடித்தளம் இல்லையென்றால், அந்தச் கட்டடம் நிற்கவே நிற்காது. இன்றைக்குக் கழகம் இவ்வளவு உறுதியாக நிற்கிறது என்றால், இந்தக் கழ்கத்துக்காக உழைத்த அடித்தளம், இங்கு வந்திருக்கக்கூடிய மூத்த முன்னோடிகள் நீங்கள்தான். எனவே, கழகத்தின் வேர்களுக்கு நன்றி சொல்கின்ற வகையில், இன்றைக்கு இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இந்தியாவிலேயே பெருமையாகச் சொல்லலாம், இன்றைக்கு இந்தியாவிலேயே எந்த இயக்கமும் இப்படி ஒரு நிகழ்ச்சி நடத்துவது கிடையாது. அ.தி.மு.க-வாக இருக்கட்டும், பா.ஜ.க-வாக இருக்கட்டும், எந்த இயக்கத்தை வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளுங்கள்; மூத்த முன்னோடிகளுக்கு மதிப்பளிக்கும் இப்படி ஒரு நிகழ்ச்சி நடக்கிறது என்றால், அது நம் திராவிட முன்னேற்றக் கழகத்தில் மட்டும்தான்.

### மூத்த முன்னோடிகள்

ஏன் இப்படி ஒரு நிகழ்ச்சி நடத்துகிறோம் என்றால், தி.மு.க-வைப் பொறுத்தவரை இது தொண்டர்களால் உருவான ஒரு இயக்கம். இன்றைக்கு நம் முதலமைச்சர் தலைமையில் நம் கழகம் சந்தித்த அத்தனை தேர்தலிலும் வெற்றி பெற்றிருக்கிறோம் என்றால், இங்கு வந்திருக்கக்கூடிய மூத்த முன்னோடிகள் நீங்கள் மிக மிக முக்கியமான ஒரு காரணம். இப்படி மக்களின் நம்பிக்கையைக் காப்பாற்றுகின்ற வகையில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நம் முதலமைச்சர் அவர்கள் இன்றைக்குப் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டு வருகிறார். தேர்தல் வாக்குறுதியில் சொன்னவற்றையும் செய்துகொண்டு வருகிறார், சொல்லாத திட்டங்களையும் நிறைவேற்றிக் கொண்டு வருகிறார்.

சில திட்டங்களை மட்டும், இங்கே உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். குறிப்பாக மகளிர் விடியல் பயணத் திட்டம், பள்ளிப் பிள்ளைகளுக்குக் காலை உணவுத் திட்டம், கல்லூரி மாணவர்களுக்கு - மாணவியாக இருந்தால் புதுமைப்பெண், மாணவனாக இருந்தால் தமிழ்ப்புதல்வன் - மாதம் 1000 ரூபாய் கல்வி ஊக்கத்தொகை வழங்குகின்ற திட்டம். அதேபோல இப்பொழுது சமீபத்தில் 10 லட்சம் கல்லூரி மாணவ மாணவிகளுக்கு மடிக்கணினி வழங்குகின்ற திட்டம்.

### மகளிர் உரிமைத் தொகைத் திட்டம்

இவை அனைத்திற்கும் மேலாக ஒரு திட்டம், தேர்தல் வாக்குறுதியில் நாம் சொன்ன திட்டம், நம் எதிர்க்கட்சியினர் எல்லாம் செய்ய முடியாது என்று சொன்ன திட்டம், அதையும் நம் தலைவர் செய்து காட்டினார். அதுதான் கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம். இன்றைக்கு ஒவ்வொரு மாதமும் ஒரு கோடியே 31 லட்சம் மகளிருக்குக் கலைஞர் மகளிர் உரிமைத் தொகையை நம் முதலமைச்சர் கொடுத்துக்கொண்டு வருகிறார்.

சமீபத்தில் நம் தலைவர் ஒரு விஷயம் செய்தார், ஒரு மிகப்பெரிய சாதனை, யாருமே எதிர்பார்க்காத ஒரு விஷயம். ஏனெனில், ஒன்றிய பா.ஜ.க அரசு பல்வேறு திட்டங்கள் தீட்டினார்கள். எப்படியாவது நீதிமன்றத்திற்குச் சென்று இந்த மகளிர் உரிமைத் திட்டத்தைச் சட்டமன்றத் தேர்தலைக் காரணம் காட்டி நிறுத்திவிடலாம் என்று ஒரு முயற்சி செய்தார்கள். ஆனால், நம் தலைவர் அதைத் தெரிந்துகொண்டு, ``இப்போது பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் என மூன்று மாதங்களுக்குச் சேர்த்து, நீங்கள் என் தமிழ்நாட்டு மகளிருக்கு 1,000 ரூபாய் கொடுப்பதைத் தடுக்கிறீர்களா? நான் தருகிறேன் 5,000" என்று நம் தலைவர் அவர்கள் 3,000 ரூபாயுடன் சேர்த்து கோடைக் காலத்திற்காக ஒரு சிறப்பு நிதியாக 2,000 என மொத்தம் 5000 ரூபாயைத் தந்துள்ளார்.

### பா.ஜ.க மீது ஒரு பயம்

நம் தலைவர் அவர்கள் தமிழ்நாட்டு மகளிருக்குக் கொடுத்தது மிகப்பெரிய ஒரு சர்ப்ரைஸ், எதிர்க்கட்சிக்குக் கொடுத்தது மிகப்பெரிய ஒரு அதிர்ச்சி (Shock). அதுமட்டுமல்ல, தலைவர் 7 மணிக்குத்தான் வங்கியில் செலுத்தினார், 9 மணிக்கே நம் மகளிர் எல்லாம் சென்று எடுத்துவிட்டார்கள். ஏன்? ஏனெனில் அந்த அளவுக்கு பா.ஜ.க மீது, ஒன்றிய அரசு மீது நம் மக்களுக்கு ஒரு பயம். ஏதாவது ஒரு காரணத்தைக் காட்டி எப்படியாவது அந்தப் பணத்தையும் இவர்கள் எடுத்துவிடுவார்களோ, மக்களிடமிருந்து பிடுங்கிவிடுவார்களோ என்று, தமிழ்நாட்டு மகளிருக்கு அந்த அளவுக்கு பா.ஜ.க மீது ஒரு பயம்.

எனவே இப்படிப் பல்வேறு திட்டங்களை, நம் தலைவர் அவர்கள் செயல்படுத்திக்கொண்டு இருக்கிறார்கள். குறிப்பாக, இந்த உடுமலைப்பேட்டைப் பகுதிக்கு ஏராளமான திட்டங்களை நம் அரசு செயல்படுத்தியுள்ளது.

உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனையில், புதிய கட்டடங்கள், அறிவுசார் மையம், குப்பைக் கிடங்கு உயிரி அகழ்ந்தெடுத்தல் (Bio-mining) முறையில் சுத்தப்படுத்துகின்ற பணிகள், அரசு மருத்துவமனையில் ஆர்.டி.பி.சி.ஆர் ஆய்வகம், புதிய பேருந்து நிலையம் எனப் பல்வேறு திட்டங்களை நம் அரசு செய்துகொண்டு இருக்கிறது. இந்த திட்டங்களால்தான் இன்றைக்குத் தமிழ்நாட்டிலேயே முதன்மை மாநிலமாக, வளர்ச்சி அடைகின்ற மாநிலங்களில் முதல் மாநிலமாக 11.19 சதவிகித வளர்ச்சியோடு தமிழ்நாடு முதலிடத்தை நாம் அடைந்துள்ளோம். எனவே வந்திருக்கக்கூடிய உங்களுக்கு இன்னும் 50 நாட்கள்தான் இருக்கின்றன. அந்த 50 நாட்களும் எப்படி உங்களின் இளமைக் காலத்தில் நீங்கள் களத்தில் இறங்கிப் பிரச்சாரத்தை மேற்கொண்டு செய்திருப்பீர்களோ, ஒவ்வொரு வெற்றிக்குப் பின்னாலும் நீங்கள் நிச்சயமாகக் காரணமாக இருந்திருப்பீர்கள். சென்ற முறை நம் தலைவர் முதலமைச்சரானதற்குக் காரணம் இங்கு வந்திருக்கக்கூடிய உடன்பிறப்புகளாகிய நீங்கள்தான். மீண்டும் நம் தலைவர் அவர்கள் அந்த முதலமைச்சர் நாற்காலியில் உட்கார வேண்டும் என்றால், அடுத்த 50 நாட்கள் நம் களப்பணியை ஆற்ற வேண்டும். வந்திருக்கக்கூடிய உங்களுக்குக் களப்பணியைப் பற்றித் தெரியும் அதிலும் தி.மு.க-வின் தொண்டர்களைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை.

### திருப்பதிக்குச் செல்கி-றோம்

ஒரேயொரு சிறிய உதாரணத்தை மட்டும் இங்கே சொல்ல விரும்புகிறேன். 1976-ஆம் ஆண்டு மிசா சட்டத்தை, ஒன்றிய அரசு கொண்டு வந்தது. அப்பொழுது நம் கழகத் தோழர்கள் அத்தனை பேரையும் - கழகப் பேச்சாளர்கள், கழகத் தொண்டர்கள் எல்லோரையும் கைது செய்தார்கள். நம் தலைவர் அவர்கள் ஒரு வருட காலம் சிறையில் இருந்தார். அப்பொழுது கலைஞரைத் தவிர அனைவரையும் கைது செய்துவிட்டார்கள். கலைஞரைப் பார்ப்பதற்குக்கூட யாருக்கும் அனுமதி கிடையாது, சென்னைக்கு வருவதற்கு அனுமதி கிடையாது. ஆனால், நம் தி.மு.க தொண்டர்கள், மூத்த முன்னோடிகள் நீங்கள் என்ன செய்தீர்கள் என்றால், கலைஞரை யாரும் பார்க்கக் கூடாது, ஆறுதல் சொல்லக் கூடாது என்று அப்பொழுது இருந்த ஒன்றிய அரசு எவ்வளவோ கட்டுப்பாடுகள் விதித்தது. ஆனால், தி.மு.க தொண்டர்கள் என்ன செய்தார்கள் என்றால், `நாங்கள் திருப்பதிக்குச் செல்கிறோம், திருத்தணிக்குச் செல்கிறோம்' என்று கூறிவிட்டு, இங்கிருந்து பேருந்து எடுத்துக் கொண்டு திருப்பதிக்குச் சென்று மொட்டை போட்டுக்கொண்டு, அங்கிருந்து மெரினா கடற்கரை பார்க்கச் செல்கிறோம் என்று கூறி, அங்கு வந்து பார்த்துவிட்டு, அங்கிருந்து நடந்து சென்று கோபாலபுரம் வீட்டுக்குச் சென்று கலைஞருக்குத் தைரியம் சொன்ன கூட்டம்தான், திராவிட முன்னேற்றக் கழகத்தின் உடன்பிறப்புகள், நம் மூத்த முன்னோடிகளான நீங்கள்.

எனவே உங்களையெல்லாம் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி. இது ஏதோ ஒரு இளைஞர் அணிச் செயலாளராகவோ, துணை முதலமைச்சராகவோ நான் உங்களைச் சந்திப்பதற்கு வரவில்லை. மாறாக ஒரு பேரனாக, ஒரு தாத்தாவையும் பாட்டியையும் செய்கின்ற கடமையாக, அந்த உரிமையோடு உங்களையெல்லாம் பார்க்க வந்திருக்கிறேன். உங்களையெல்லாம் பார்த்ததில் மிகுந்த மகிழ்ச்சி.

### வரலாறு நீங்கள்தான்

எந்த நிகழ்ச்சியில் நம் கழக மூத்த முன்னோடிகளைச் சந்திக்கும்போதும் ஒரே ஒரு விஷயத்தைப் பெருமையோடு பகிர்ந்துகொள்ள விரும்புவேன். நான் உங்களையெல்லாம் பார்க்கும்போது பெருமையாக இருக்கும், ஏனெனில் கழகத்தின் வரலாறு நீங்கள்தான். ஆனால், உங்களையெல்லாம் பார்க்கும்போது அதே நேரத்தில் பொறாமையாகவும் இருக்கும். பெருமை என்னவென்றால் கழகத்தின் வரலாறு நீங்கள். பொறாமை என்னவென்றால், நான் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை நேரில் பார்த்திருக்கிறேன், ஆனால் பெரியாரை நேரில் பார்த்தது கிடையாது, அவரின் பேச்சுகளைப் படித்திருக்கிறேன். பேரறிஞர் அண்ணாவை நான் நேரில் பார்த்தது கிடையாது, தொலைக்காட்சியில் செய்திகளில் பார்த்ததோடு சரி. ஆனால் இங்கு வந்திருக்கக்கூடிய நீங்கள் கலைஞரை நேரில் பார்த்திருப்பீர்கள், பேரறிஞர் அண்ணாவை நேரில் பார்த்திருப்பீர்கள், அவருடன் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருப்பீர்கள், தந்தை பெரியாருடன் போராட்டத்தில் ஈடுபட்டிருப்பீர்கள், சிறை சென்றிருப்பீர்கள்.

எனவே நான் உங்களைப் பார்ப்பது தந்தை பெரியாரின் மறு உருவமாக, பேரறிஞர் அண்ணாவின் மறு உருவமாக, முத்தமிழறிஞர் கலைஞரின் மறு உருவமாகத்தான் உங்களையெல்லாம் சந்திக்கிறேன் என்று கூறிக்கொண்டு, இந்த வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த அண்ணன் ஈஸ்வரசாமி அவர்களுக்கு மீண்டும் என் நன்றியைத் தெரிவித்து, வந்திருக்கக்கூடிய கழகத்தின் மூத்த முன்னோடிகள் அத்தனை பேருடைய பாதங்களையும் தொட்டு வணங்கி, "வெல்வோம் இருநூறு, படைப்போம் வரலாறு" என்று கூறிக் கொக்கொண்டு விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரையாற்றினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன், அர. சக்கரபாணி, திருப்பூர் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் இல.பத்மநாபன், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஈஸ்வரசாமி, தூய்மைப் பணியாளர் நல வாரியத்தின் தலைவர் திப்பம்பட்டி ஆறுச்சாமி, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகசுந்தரம், மாவட்டப் பொறுப்புக் குழு உறுப்பினர்கள் ஜெயராமகிருஷ்ணன், முபாரக் அலி, ராதிகா இளங்கோவன், முருகானந்தம், சக்திவேல், தொகுதி பார்வையாளர்கள் தமிழ்மறை, சாதிக் பாட்சா, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஷியாம் பிரசாத், மகாலிங்கம், நகரக் கழகச் செயலாளர் வேலுச்சாமி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெயக்குமார், துணை அமைப்பாளர்கள் கவியரசு, நகராட்சித் தலைவர் மத்தின், பொதுக்குழு உறுப்பினர் யு.என். பி.குமார், பர்வதர்ஷினி, ராமசாமி, ஈஸ்வரசாமி உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்து கொண்டனர்.



தருமபுரி கிழக்கு மாவட்டம், அரூர் வட்டம்,சித்தேரி கிராம ஊராட்சியில் உள்ள கலசப்பாடி, அரசநத்தம்,கருங்கல்பாடி,ஆலமரத்துவளவு, கோட்டக்காடு, உள்ளிட்ட மலைவாழ் பழங்குடியின மக்கள் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் தி.மு.க. கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் வழக்கறிஞர்.ஆ.மணியிடம் வாச்சாத்தி கலசப்பாடி தார்ச்சாலை அமைத்துக் கொடுக்கக் கோரி அளித்த மனுவின் பேரில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் மூலம் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் கோரிக்கை வைக்கப்பட்டதை தொடர்ந்து தமிழ்நாடு முதல்வர் அவர்கள் ரூ.12.70 கோடி நிதி ஒதுக்கி ஆணையிட்டார்.8 கி.மீ. தூரமுள்ள தார்ச்சாலையும், இந்த வழித்தடத்தில் உள்ள கல்லாற்றில் உயர் நிலை மேம்பாலமும் அமைக்கப்பட்டு அந்த உயர்நிலை மேம்பாலம் மற்றும் தார்ச் சாலையை அமைச்சர் பன்னீர்செல்வம் திறந்துவைத்தார். 60 ஆண்டு கால கோரிக்கையை உடனடியாக நிறைவேற்றி தந்த முதல்வருக்கு பழங்குடியின மக்கள் நன்றி தெரிவித்தனர். உடன்,தருமபுரி மாவட்ட ஆட்சியர் ரெ.சதீஷ்,தருமபுரி மேற்கு மாவட்ட செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன், மாவட்ட வருவாய் அலுவலர் ரா.கவிதா,அரூர் வருவாய் கோட்டாட்சியர் செம்மலை, வட்டாட்சியர் பெருமாள், தி.மு.க. மாநில நிர்வாகி சூடப்பட்டி. சுப்ரமணி, ஒன்றிய செயலாளர் பி.எஸ்.சரவணன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



த.மனோ தங்கராஜ்
பால்வளத்துறை அமைச்சர், கன்னியாகுமரி மேற்கு மாவட்ட செயலாளர்
எஸ்.ஆஸ்டின்
கழக துணை அமைப்பு செயலாளர்
நாகர்கோவில் ரெ.மகேஷ்
நாகர்கோவில் மாநகர மேயர், கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட செயலாளர்
பா.பாபு DEEE
ஒன்றிய கழக செயலாளர், அகஸ்தீஸ்வரம் தெற்கு ஒன்றியம்
அகஸ்தீஸ்வரம் தெற்கு ஒன்றியம், கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம்